கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 134 | 19-11-2025 | புதன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 134 | 19-11-2025 | Wednesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## நவ.19ல் எம்எல்ஏக்கள் கூட்டம்; நவ.20ல் பதவியேற்பு:

### பிஹார் பாஜக தலைவர் திலிப் ஜெய்ஸ்வால்

பாட்னா: நவ.19–

பாஜக சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டம் இன்று நடைபெறும். பின்னர், தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்எல்ஏக்களின் கூட்டம் நடைபெறும். இதையடுத்து நாளை பதவியேற்பு விழா நடைபெறும் என்று பிஹார் மாநில பாஜக தலைவர் திலிப் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய திலிப் ஜெய்ஸ்வால், "இன்று காலை 10 மணிக்கு பாட்னாவில் உள்ள பாஜக தலைமையகமான அடல் சபஹாரில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாஜக சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டம் நடைபெறும். இதில், கட்சியின் சட்டப்பேரவைக் குழு தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இதில், சட்டப்பேரவை உறுப்பினர்களும், கட்சியின் மேலிட பார்வையாளர்களும் கலந்து கொள்வார்கள். இதனைத் தொடர்ந்து என்டிஏ கூட்டம் நடைபெறும்.

பதவியேற்பு விழா வரும் 20ம் தேதி பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் நடைபெற உள்ளது. இதில், பிரதமர் மோடி, பாஜக மூத்த தலைவர்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த பல்வேறு மாநிலங்களின் முதல்வர்கள், துணை முதல்வர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள். வளர்ச்சி அடைந்த பிஹாரை உருவாக்குவதற்கான உறுதிமொழியை நாங்கள் ஏற்க இருக்கிறோம். புதிய அரசாங்கம் பொறுப்பேற்பதற்கான அனைத்துப் பணிகளும் நவ.21ம் தேதிக்குள் நிறைவடையும்." என தெரிவித்துள்ளார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய ஜேடியு மூத்த தலைவர் விஜய் குமார் சவுத்ரி, "திங்கள் கிழமை கூடிய அமைச்சரவை கூட்டத்தில், தற்போதைய சட்டப்பேரவையை கலைப்பதற்கான முறைப்படியான பரிந்துரை அளிக்கப்பட்டது. இது நவ.19 முதல் அமலுக்கு வரும். இந்த பரிந்துரையை அடுத்து முதல்வர் நிதிஷ் குமார், ஆளுநர் மாளிகைக்குச் சென்று ஆளுநர் ஆரிப் முகமது கானை சந்தித்து, அமைச்சரவை பரிந்துரையை தெரிவித்தார். சட்டப்பேரவைத் தேர்தலில், மொத்தமுள்ள 243 தொகுதிகளில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 202 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளதால், புதிய அரசாங்கம் பொறுப்பேற்பதற்கான நடைமுறைகளை ஆளுநர் மேற்கொள்வார்." என தெரிவித்தார்.

நடந்து முடிந்த பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 243 தொகுதிகளில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 202 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதில், பாஜக 89, ஜேடியு 85, எல்ஜேபி (ஆர்வி) 19, ஹெச்ஏஎம் 5, ஆர்எல்எம் 4 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன. எதிர் தரப்பில் மகா கூட்டணி 35 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதில், ஆர்ஜேடி 25, காங்கிரஸ் 6, சிபிஐ(எம்எல்) 2, ஐஐபி 1, சிபிஎம் 1 ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றன. இரு கூட்டணிகளிலும் இடம்பெறாத அகில இந்திய மஜ்லிஸ் இ இட்டஹாதுல் முஸ்லிமீம் கட்சி 5 தொகுதிகளிலும், பிஎஸ்பி 1 தொகுதியிலும் வெற்றி பெற்றன.

## நெல் கொள்முதலுக்கான ஈரப்பதத்தை 17%லிருந்து 22%ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

### பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்



சென்னை: நவ.19–

தமிழ்நாடு குறுவை பருவத்தில் அதிக நெல் உற்பத்தி மற்றும் கொள்முதலில் சாதனை படைத்துள்ளதையடுத்து விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக உயர்த்தி விரைந்து ஆணை வழங்கிடவும், செறிவூட்டப்பட்ட அரிசி மணிகளின் மாதிரி எடுக்கும் அதிகாரத்தை தென்னிந்திய மாநிலங்களில் உள்ள இந்திய உணவுக் கழக அதிகாரிகளுக்கு வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாடு குறுவை பருவத்தில் அதிக நெல் உற்பத்தி மற்றும் கொள்முதலில் சாதனை படைத்துள்ளதையடுத்து விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக உயர்த்தி விரைந்து ஆணை வழங்கிடவும், தமிழ்நாட்டில் நெல் விவசாயிகளின் அவசர மற்றும் முக்கியமான தேவைகள் தொடர்பாக வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

* சாதனை படைத்த குறுவை பருவ நெல் உற்பத்தி

தமிழ்நாட்டில், குறிப்பாக டெல்டா மாவட்டங்களில்,இந்த ஆண்டு கரீஃப்(குறுவை) பருவத்தில் மிக அதிக அளவு நெல் உற்பத்தி எய்தப்பட்டுள்ளது. 16.11.2025 நிலவரப்படி, நெல் கொள்முதல் கடந்த 2024 2025 ஆம் ஆண்டினுடைய 4.81 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து நடப்பாண்டில் 14.11 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது என்றும், இது தமிழ்நாட்டின் வரலாற்றில் குறுவை (கரீஃப்) பருவத்தில் நெல் கொள்முதலில் புதிய சாதனையாகும் என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 16.11.2025 நிலவரப்படி 1,932 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, 1,86,674 விவசாயிகளிடமிருந்து 14.11 லட்சம் மெட்ரிக் டன் நெல்லை ரூ.3,559 கோடி வழங்கி கொள்முதல் செய்துள்ளது. ஒப்பீட்டளவில், கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் (16.11.2024 வரை), 1,095 நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் 4.83 லட்சம் மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது.

தற்போதைய நெல் கொள்முதல் பருவத்தில் (31.08.2026 வரை) விற்பனைக்குரிய சந்தை உபரி நெல் 98.25 லட்சம் மெட்ரிக் டன்னாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அரிசி அடிப்படையில் இது 66.81 லட்சம் மெட்ரிக் டன் ஆகும். இது தொடர்பாக, 8.8.2025 அன்று, Kharif Marketing Season (KMS) 2025 2026க்கான அரிசி கொள்முதல் இலக்காக 20 லட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயிக்குமாறு ஒன்றிய உணவு மற்றும் பொது விநியோகத் துறைக்கு முன்மொழிவு பரிந்துரைக்கப்பட்டது.

தற்போது ஒன்றிய உணவு மற்றும் பொது விநியோகத் துறை, KMS 2025 2026க்கான அரிசி கொள்முதல் இலக்காக 31.3.2026 வரை 16 லட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயித்துள்ளது. நெல் சாகுபடியில் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றில் சாதனை அளவிலான அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, KMS 2025 2026க்கான 16 லட்சம் மெட்ரிக் டன் அரிசி இலக்கை, கரீஃப் பருவத்தின் கடைசியில் கொள்முதல் செய்யப்படும் மொத்த நெல் அளவிற்கேற்ப உயர்த்தி திருத்தம் செய்திட தமிழ்நாடு அரசுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இரண்டாவதாக, காவிரி டெல்டா பகுதி மற்றும் பிற மாவட்டங்களில் பெய்துவரும் வடகிழக்குப் பருவமழையைக் கருத்தில் கொண்டு, நெல் கொள்முதலுக்கான ஈரப்பதம் அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக நிர்ணயிக்குமாறு தமிழ்நாடு அரசால் 19.10.2025 அன்று ஒன்றிய உணவு மற்றும் பொது விநியோகத் துறைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

மூன்று குழுக்கள் 25.10.2025 முதல் 28.10.2025 வரை தமிழ்நாட்டில் களப்பயணம் மேற்கொண்டு விவசாயிகளிடமிருந்து நெல் மாதிரிகளை சேகரித்தன. ஆனால் தளர்வு தொடர்பான உத்தரவுகள் இன்றளவும் கிடைக்கவில்லை.

கரீஃப் (குறுவை) பருவ கொள்முதல் இன்றளவும் நடந்து கொண்டிருக்கும் நிலையில், 16.11.2025 முதல் வடகிழக்கு பருவமழை மீண்டும் தீவிரமடையும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது கொள்முதல் செய்யப்படும் நெல்லில் மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் வகையில் ஈரப்பத அளவு தளர்வு உத்தரவினை விரைவாக வழங்கிட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களிடம் இக்கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

செறிவூட்டப்பட்ட அரிசி மாதிரிகள் எடுப்பதில் தளர்வு ஆணைகள் கோரி மாநில அரசு, 07.10.2025 அன்று 5 ஒப்பந்த தாரர்களுக்கு செறிவூட்டப்பட்ட அரிசியை விநியோகிக்க உத்தரவு வழங்கியது என்றும், 16.11.2025 நிலவரப்படி ஒப்பந்ததாரர்கள் 1,760 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து, FoRTrace இணையதளத்தில் 123 மாதிரிகளைப் பதிவேற்றியுள்ளனர் என்றும், இதில் பதிவேற்றப்பட்ட 77 மாதிரிகளில், இதுவரை 33 மாதிரிகளுக்கு மட்டுமே முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், ஒரு மாதிரி முடிவை அறிவிக்க கிட்டத்தட்ட 12 நாட்கள் ஆகின்றன என்பதை குறிப்பிட்டு, இந்தமுறை காலதாமதத்தை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரவை செய்து பெறப்படும் கண்டுமுதல் அரிசியை நகர்வு செய்திடவும், அதனைத் தொடர்ந்து வரவிருக்கும் சம்பா (ரபி) பருவ நெல் கொள்முதலுக்குத் தேவையான இடத்தினை ஏற்படுத்திடவும் அதிக அளவு செறிவூட்டப்பட்ட அரிசி அரவைக்குத் தேவைப்படுகின்றன.

எனவே, தற்போதுள்ள 25 கிலோ FRK சிப்பமிடும் அளவை 50 கிலோவாக அதிகரிக்க வேண்டும் என்றும், மாதிரி தொகுதி அளவை 10 MT-இலிருந்து 25 MT ஆக BIS தரநிலைகளுக்கு ஒரு தொகுதிக்கு 500 மூட்டைகள்) ஏற்ப அதிகரிக்க வேண்டும் என்றும், மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலம் எடுக்கப்பட வேண்டிய மாதிரிகளின் எண்ணிக்கை குறைந்து, இடப்பற்றாக்குறை நீங்கி, முடிவுகளை அறிவிக்கும் காலம் 12 நாட்களிலிருந்து 7 நாட்களாகக் குறையும் என்று குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இது தொடர்ச்சியான நெல் அரவைக்கு வழிவகுக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், செறிவூட்டப்பட்ட அரிசி மணிகளின் மாதிரி எடுக்கும் அதிகாரத்தை தென்னிந்திய மாநிலங்களில் உள்ள இந்திய உணவுக் கழக அதிகாரிகளுக்கு வழங்கி, தென்னிந்திய மாநிலங்களில் உள்ள ஆய்வகங்களில் சோதனை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பரிந்துரைகளை பரிசீலனை செய்து நெல் அரவை ஆலைகளுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி மணிகள் விநியோகத்தினை எளிதாக்கத் தேவையான உத்தரவுகளை பிறப்பித்திட வேண்டுமென்றும், இதன்மூலம் சோதனை முடிவுகளைப் பெறுவதற்கான காலம் கணிசமாகக் குறையும் என்றும், தமிழ்நாடு விவசாயிகளின் நலன் கருதி இவ்விவகாரத்தில் விரைவில் நல்ல முடிவுகளை எடுத்திட, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வாக்காளர் தீவிர சிறப்பு திருத்தம் விண்ணப்பம் படிவம் தொடர்பாக ஈரோடு மாநகர இஸ்லாமிய கூட்டமைப்பின் சார்பாக ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு.



ஈரோடு. நவ. 19

வாக்காளர் சிறப்பு திருத்த பட்டியல் தொடர்பாக ஈரோடு மாநகர இஸ்லாமிய கூட்டமைப்பின் சார்பில் நேற்று ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு ஒன்று கொடுக்கப்பட்டது.

அந்த மனதில் அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளதாவது..

வாக்காளர் தீவிர சிறப்பு திருத்த பணிகளுக்கான விண்ணப்ப படிவங்கள் கடந்த சில நாட்களாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. 17 சதவிகித விண்ணப்பங்கள் வழங்கப்படவில்லை. என தேர்தல் ஆணையமே அறிவிப்பு செய்துள்ளது.

குடி மாற்றம் செய்யப்பட்ட பொதுமக்கள் நிறைய பேருக்கு விண்ணப்ப படிவங்கள் கிடைக்காமல் உள்ளது. இது தொடர்பாக வாக்காளர்கள் பாக அலுவலர்களை தேடி கேட்கும்போது மாற்றம் ஆகிவிட்டார்கள் என நாங்கள் கூறி கொடுத்து விட்டோம் எனவும், மறைவு வாக்காளர் பட்டியல் மறைவு வாக்காளர் பட்டியல் வெளியானவுடன் புதிதான படிவம் ஆறு கொடுத்து தான் சேர முடியும் என.

இது தவிர சிறப்பு திருத்தம் தொடர்பாக தேர்தல் ஆணையம் அறிவிப்பு செய்த போது, விண்ணப்பம் படிவம் கொடுப்பதற்கோ பெறுவதற்கோ தேதி நிர்ணயம்.

இதன் காரணமாக எப்பொழுது வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்ற வாக்காளர் பலபேர் ஏமாற்றம் அடைந் துள்ளார்கள். மேலும் தேர்தல் வட்டாட்சியர் சட்டமன்றத் தொகுதியில் அரசியல் கட்சிகளுக்கு விளக்கக் கூட்டத்தில் வாக்காளர்கள் அந்த முகவரியில் இல்லா விட்டால் விண்ணப்ப படிவம் அந்த வீட்டின் முன்பு வெட்டப்பட்டு ஆக அலுவலர் அதை மூன்று முறை படம் எடுத்த அதன் பிறகு மாற்றம் என முடிவு செய்யப்படும். எனக் கூறியதும்.

வாக்காளர்கள் விண்ணப்பம் படிவம் கேட்டு அலைகழிக்கப்படும் நிலை. மேலும் தேர்தல் ஆணையத்தின் விதியின்படி மாற்றம் என முடிவு எடுக்கவில்லை என்பதாலும் வாக்காளர்களுக்கு ஏமாற்றம் என்பதால் சில நாட்கள் தேதி நிர்ணயம் செய்து விண்ணப்ப படிவங்களை வாக்காளர்களுக்கு வழங்கி வாக்காளர்கள் விடுபடாமல் அவர்களின் வாக்குரிமை இழக்காமல் கிடைத்தது நடவடிக்கை எடுக்க வேண்டுமாய், ஈரோடு மாநகர இஸ்லாமிய கூட்டமைப்பின் சார்பாக பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## JCI (ஜே.சி.ஐ.)கோயம்புத்தூர் ஜெனித் 2026 ஆம் ஆண்டுக்கான புதிய தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்வு



கோவை நவ:19

இந்திய அளவில் பல்வேறு சேவைகளை செய்து வரும் JCI ஜே.சி.ஐ. அமைப்பின் கிளையான கோயம்புத்தூர் ஜெனித் கோவையில் பல்வேறு சமூக நல பணிகளை ஒருங்கிணைத்து வருகின்றனர்..

இந்நிலையில் ஜே.சி.ஐ.கோயம்புத்தூர் ஜெனித் 2026 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள தனியார் அரங்கில் நடைபெற்றது..

விழாவில் தலைமை விருந்தினராக முன்னாள் தேசியத் தலைவர் யிசிமி றிறிறி டாக்டர் சுப்பிரமணியன், கவுரவ விருந்தினர்களாக தேசிய துணைத் தலைவர் JFS அஷோக், புதிய மாவட்டத் தலைவர் JCI PPP பிரேம்சரண்,

முன்னாள் மாவட்டத் தலைவர்கள் JFS கவுசிக்.R, JCI Sen, பழனியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்..

தொடர்ந்து 2026 ஆம் ஆண்டிற்கான புதிய தலைவராக தலைவர் JC HGF சிந்து மற்றும் செயலாளர் JC HGF அரவிந்த்,காசாளர் JC பிரவீன் GB, துணை தலைவர்கள் JC கார்த்திக்,JC பிரபு,JC கவிதன்,JC மணிகண்டன், JC பிளஸ்ஸி,இயக்குனர்கள் JC தர்ஷன்,JC ரேச்சல் ஜெமிமா, JC சரண்யாதேவி, JC கார்த்திக்,மகளிர் அணி தலைவர் JC ஆனந்தி செல்வன்,JC ஜெயந்தி,ஜூனியர் அணி தலைவர் JJC ஆதித்யன்,செயலாளர் JJC ஹாஸினி,பொருளாளர் JJC ஹரிணி, ஆகியோர் பொறுப்பேற்று கொண்டனர்..

விழாவில் ஜெனித் கிளையில் கடந்த ஆண்டுகளில் சிறந்து செயல்பட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டது..

கடந்த 2025 ஆம் ஆண்டு சிறந்த தலைவராக செயல்பட்ட JCI Sen முரளிதரன் ஜெனித் குழுவில் ஐந்து விருதுகள் வென்றதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில்,ஜெனித் அமைப்பு வரலாற்றில் முதல் முறையாக உறுப்பினர்களுக்காக முழுக்க இலவச 'ஸ்டால் கான்செப்ட்' அறிமுகப்படுத்தப்பட்டது.

புதிய நிர்வாகிகள் பதவி ஏற்ப தொடர்ந்து 2026 ஆம் ஆண்டின் புதிய திட்டங்கள் அறமுகப்படுத்தப்பட்டன..

குடும்ப இணைப்பு மற்றும் உற்சாகத்திற்கான களநிகழ்வான ஜெனித் பிரீமியர் லீக் 2.0,

ஒவ்வொரு மாதமும் ஒரு சிறப்பு திறன் மேம்பாட்டு அமர்வு, இளைஞர் போதைப்பொருள் விழிப் புணர்வில் கோயம்புத்தூரின் முக்கிய முயற்சி,குழந்தைகளின் படைப்பாற்றல் மற்றும் தலைமைத்திறன் வளர்ச்சிக்கான தளம்,பெண்களின் சுயநிலையை மேம்படுத்தும் ஆற்றல் தளம், குடும்ப நலன், ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியை மையமாகக் கொண்ட முழுமையான திட்டம்,ஆசிரியர்களின் சமூக பங்களிப்பை கௌரவிக்கும் சிறப்பு விழா உள்ளிட்ட திட்டங்களை வரும் ஆண்டில் சிறப்பாக செயல்படுத்துவது என முடிவு எடுக்கப்பட்டது

விழாவில் ஜோன் 17 ல் இருந்து 300க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அவர்களது குடும்பத்தினர்களுடன் கலந்து கொண்டனர்.

# அரசு போக்குவரத்து கழகத்தில் ஒப்பந்த முறையில் ஓட்டுனர் நடத்துனர் நியமனத்தை கைவிட ஏஐடியூசி சங்க ஆண்டு பேரவை தீர்மானம்




மணப்பாறை நவ 19

திருச்சி கருமண்டபத்தில் உள்ள தனியார் திருமண மஹாலில் அரசு போக்குவரத்து கழக திருச்சி மண்டல ஏஐடியூசி சங்கத்தின் ஆண்டு பேரவை கூட்டம் நடைபெற்றது

இப்பேரவைக்கு அரசு போக்குவரத்து கழக திருச்சி மண்டல ஏஐடியூசி சங்கத்தின் தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார் .பொதுச் செயலாளர் சுந்தர்ராஜ் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். பிரதிநிதிகள் விவாதம் செய்தனர்.

பொதுச் செயலாளர் தொகுப்புரை யுடன் அறிக்கை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

பொருளாளர் கார்த்திகேயன் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தார். தணிக்கை குழு அறிக்கைக்கு பின் பேரவையில் வரவு செலவு அறிக்கை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சம்மேளன துணை பொதுச் செயலாளர் முருகராஜ் சிறப்புரை ஆற்றினார். புதிய நிர்வாகிகளகா தலைவரகா செல்வராஜ் பொதுச் செயலாளரகா சுந்தர்ராஜ் பொருளாளரகா கார்த்திகேயன் அலுவலகசெயலாளரகா அன்பழகன் உள்ளிட்ட 19 நிர்வாகிகள் 41 நிர்வாக குழு உறுப்பினர்கள் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளை சம்மேளன பொருளாளர் நேருதுரை துணை பொதுச் செயலாளர் சுப்பிரமணியன் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் செல்வராஜ் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணை செயலாளர் இந்திரஜித்ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் சுரேஷ் விசி, தலைவர் நடராஜா பொருளாளர் ராமராஜ் ஆகியோர் புதிய நிர்வாகிகளை வாழ்த்தி பேசினார்கள். தமிழ்நாடு விவசாய சங்க புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி கட்டுமான சங்க மாவட்ட தலைவர் முருகன் ஙிபிணிலி ஞ்ஜிஷி கிமிஜிஹிசி நிர்வாகி கங்காதரன் சி.பி.ஐ புறநகர் மாவட்ட பெருளாளர் ஜனசக்தி உசேன் ஆகியோர் பேரவையை வாழ்த்தி பேசினார்கள்.

தமிழக அரசு தனியார் மயநடவடிக்கையை கைவிட வேண்டும். ஒப்பந்த முறையில் ஓட்டுனர் நடத்துனர் நியமனத்தை கைவிட வேண்டும்.

காலிப்பணியிடங்களில் ஓட்டுனர் நடத்துனர் தனித்தனியே நியமனம் செய்திட வேண்டும்.

ஒப்பந்த நிலுவைத் தொகையை வழங்கிட வேண்டும்.

ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் அகவிலைப்படி உயர்வினை நீதிமன்ற உத்தரவின் படி முழுமையாக வழங்கிட வேண்டும்.

ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் ஓய்வு கால பணப் பலன்களை உடன் வழங்க வேண்டும்.

1.4.2003 க்கு பின் பணியில் சேர்ந்த அனைவரையும் பென்சன் திட்டத்தில் சேர்த்திட வேண்டும். அரசே பென்சனை ஏற்று நடத்திட வேண்டும். பெரும்பாலான பேருந்துகள் மகளிர் கட்டணம் இல்லா பேருந்துகளாக இயக்க படும் நிலையில் வருவாய் இலக்கு நிர்ணயம் செய்து நடத்துனர்களை வசூல் கேட்டு நிர்ப்பந்தம் செய்வது கைவிடப்பட வேண்டும்.

பணி பார்க்கும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

வழித்தட நீட்டிப்பு செய்த பேருந்துகளுக்கு உரிய நேரம் ஒதுக்கி அட்டவணை வெளியிட வேண்டும். என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

# பூட்டை கிராமத்தில் தாய் தந்தை இழந்த குழந்தைகளுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆறுதல் தெரிவித்தும் அன்பு கரம் திட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கினார்.



சங்கராபுரம் நவ 19

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ள பூட்டை கிராமத்தில் தாய் தந்தை இழந்த குழந்தைகளுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆறுதல் தெரிவித்தும் அன்பு கரம் திட்டத்தில் 1 லட்சம் ரூபாய் நிதியுதவி அளித்து வீட்டுமனை பட்டா மற்றும் நான்கு பிள்ளைகளில் ஒருவருக்கு தற்காலிக அரசு வேலை வழங்குவதாக தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ். பிரசாந்த் , சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் , ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், திமுக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்கள் வீடுவீடாகச் சென்று வழங்கப்பட்டு பூர்த்தி செய்து பெறப்பட்டு வருகிறது மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் நவ 19 :

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளிலும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 அமல்படுத்தப்பட்டு, வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்கள் வீடுவீடாகச் சென்று வழங்கப்பட்டு பூர்த்தி செய்து பெறப்பட்டு வருகிறது.

இதனைத்தொடர்ந்து, திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்தில் உள்ள கும்மிடிப்பூண்டி,பொன்னேரி,திருத்தணி,திருவள்ளூர்,பூந்தமல்லி,ஆவடி,மதுரவாயல்,அம்பத்தூர், மாதவரம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்வதற்கு அவரவர் வாக்குச்சாவடி மையங்களில் 18.11.2025, 19.11.2025 மற்றும் 20.11.2025 (செவ்வாய், புதன் (ம) வியாழன்) ஆகிய நாட்களில் மாலை 03.00 மணி முதல் 06.00 மணி வரை உதவி மையங்கள் செயல்படஉள்ளது.

வாக்காளர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான கணக்கெடுப்பு படிவத்தினை நிரப்புதல் தொடர்பாக சந்தேகங்கள் ஏதும் இருப்பின், மேற்படி உதவி மையங்களை பயன்படுத்தி தீர்வு பெற்றுக்கொள்ளுமாறும், மேலும், மேற்படி மையங்கிலேயே பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களையும் அளிக்கலாம் என திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.




விழுப்புரம் மாவட்ட மைய நூலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். துரை. ரவிக்குமார் முன்னிலையில நூலக புரவலராக ஜே.ஆர்.சி மாவட்டக் கன்வீனர் முனைவர். ம. பாபு செல்வதுரை சேர்நதார்.

2024 2025 ஆண்டுக்கான நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் அமைக்கப்பட்ட மாவட்ட மைய நூலகம் கூடுதல் கட்டடம் திறப்பு விழாவில் நாடாளுமன்ற உறுப்பனர் முனைவர் துரை. ரவிக்குமார் அவர்கள் திறந்து வைத்தார். இதல் மாவட்ட நூலக அலுவலர் விஜியக்குமார். மைய நூலகர் இளஞ்செழியன், நூலகர்கள் வேல்முருகன், ஆரோக்கியம், புவனேஸ்வரி, சசிக்குமார் ஏற்பாடு செய்திருந்தனர். எம்.பி முன்னிலையில் ஜே.ஆர்.சி மாவட்டக் கன்வீனர் முனைவர். ம பா பு செல்வதுரை அவர்கள் நூலக புரவலராக இணைந்தார். இதில் வாசகர்கள் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

# அங்கன்வாடி மைய திறப்பு விழா



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்.மு.பெ.சாமிநாதன் அவர்கள் திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், பொங்குபாளையம் ஊராட்சி, பள்ளிபாளையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.16.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையத்தினை திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், வடக்கு மாவட்ட செயலாளர் மாநகராட்சி மாண்புமிகு மேயர் தினேஷ்குமார் மாநகர செயலாளர் தங்கராஜ். திமுக ஒன்றிய செயலாளர் காளிபாளையம் விஸ்வநாதன்.திருப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.விஜயகுமார், உதவி பொறியாளர்கள் திரு.கார்த்திக்குமார், திரு.மனோஜ் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் அங்கன்வாடி ஆசிரியர்கள் ஊர் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டார்கள்.

## உலக மரபு வார விழாவை ஒட்டி திருமலை நாயக்கர் அரண்மனையை இலவசமாக பார்வையிட அனுமதி

மதுரை: நவ.19–

தமிழ்நாடு வரலாற்றில் தனக்கென தனி முத்திரை பதித்த மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் கி.பி.1636இல் கட்டிய மஹால், இன்றும் அவரது பெயரில் கம்பீரமாய் நாயக்கர் ஆட்சியின் கட்டடக் கலைக்கு சாட்சியாக நின்று கொண்டிருக்கிறது.

இத்தாலிய கட்டிட கலைஞரால் வடிவமைக்கப்பட்டு திருமலை நாயக்கரின் ரசனையில் உருவான இந்த பிரமாண்ட மாளிகை, ஆங்கிலேயர் ஆட்சியில் 1860ல் புதுப்பிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. அதன் பின் 1971ம் ஆண்டு தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டு, இன்று வரை மதுரை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு கண்களுக்கு விருந்தளித்து வருகிறது.

நூற்றாண்டுகளை கடந்த இந்த வரலாற்று பொக்கிஷம் அதிக அளவிலான மனித வருகையால் சிதிலமடைய துவங்கியது. குறிப்பாக கட்டடத்தை சுமந்து நிற்கும் 58 அடி உயரம் கொண்ட 248 தூண்களும், மேல் மாடமும் சேதம் மற்றும் விரிசல் அடையத்துவங்கின. இதைத் தொடர்து ஆசிய வங்கி உதவியுடன் 3 கோடி ரூபாய் செலவில் திருமலை நாயக்கர் மஹாலை புதுப்பிக்க முடிவு செய்தனர். கொரோனா முதல் அலையின் பொது ஊரடங்கு காரணமாக அப்பணி தாமதமான நிலையில் அதற்கு முன்பாக சிமெண்ட் மூலம் மேற்கொண்ட பணி பலனளிக்காததால், கட்டடம் கட்டப்பட்ட அதே முறையில் புதுப்பிக்க முயற்சி எடுக்கப்பட்டது பணிகள் முடிக்கப்பட்டது.

இந்நிலையில் பாரம்பரிய கட்டடங்கள், பாரம்பரிய கலைப் பொக்கிஷங்களை பாதுகாக்கும் வகையில், ஆண்டுதோறும் நவம்பர் 19 முதல் 25 ஆம் தேதி வரை உலக மரபு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. பழங்காலத்தில் நடைபெற்ற கிராம நிர்வாகம், நீதி, தேர்தல் முறை, வேளாண்மை, பாசன முறை, நீர் நிலை பாதுகாப்பு,வரிவிதிப்பு, கோவில் நிர்வாகம் போன்ற செய்திகளை கல்வெட்டுகள் வழியே அறிய முடிகிறது எனவே அவற்றின் பெருமைகளை எடுத்துக் கூறும் வகையில், இந்த மரபு வார விழா கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில் மதுரையில் உள்ள மிகப்பெரிய வரலாற்று பொக்கிஷமாக இருக்க கூடிய மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் ஒருவரான திருமலை நாயக்கர் மன்னரால் கி.பி. 1636 ஆம் ஆண்டு கட்டப்பட்ட திருமலை நாயக்கர் மஹாலை பொதுமக்கள் பார்வையிட ஒரு வாரத்திற்கு அனுமதி இலவசம் என அறிவிக்கப்பட்டது. இரவு இரு காட்சிகளாக நடைபெறும் ஒலிஒளிக் காட்சியின் மூலம் மதுரை வரலாற்றை தமிழ், ஆங்கிலத்தில் பார்வையாளர்களுக்கு ஒலி ஒளி மூலம் விளக்கிகாட்டப்படும் இதற்கும் அனுமதி இலவசம்.

# முதலிபாளையத்தில் ஐம்பெரும் விழா



திருப்பூர், நவம்பர் 19

திருப்பூர் முக்குலத்தோர் பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பில் முதலிபாளையம் ஊராட்சியில் மாமன்னர் ராஜராஜ சோழன் சதய விழா பசும்பொன் முத்து ராமலிங்க தேவர் ஜெயந்தி விழா மருது பாண்டியர்கள் குருபூஜை விழா வாளுக்கு வேலி அம்பலம் ஜெயந்தி விழா வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு நாள் விழா என ஐம்பெரும் விழா வெகு விமர்சியாக கொண்டாடப்பட்டது இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர் முன்னதாக சிட்கோவில் இருந்து நான்கு ரோடு சந்திப்பு வரை தலைவர் வீ.டி.பாண்டியன். செயலாளர் பசும்பொன் பாலு.பொருளாளர் கொம்பையா தேவர் உள்ளிட்ட தலைவர்களை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது பின்பு அலங்கரித்து வைக்கப் பட்டிருந்த தலைவர்கள் புகைப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது பின்பு நிகழ்ச்சி நிறைவில் பங்கேற்ற அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது இந்த நிகழ்வில் நிர்வாகிகள் ராமலிங்க தேவர்.செல்லதுரை ரமேஷ் குமரேசன் வேல் குமார் நந்தகுமார் சுப்புராம் ஓர்க்ஷாப் ராஜா கர்ணா மூர்த்தி போலீஸ்கார்த்திக் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேவரின சொந்தங்கள் பெருந்திரளாக பங்கேற்றனர் பங்கேற்ற அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது குழந்தை செல்வங்கள் வருகை தந்த தலைவர்களை சிலம்பாட்டம் சுற்றி வரவேற்றது அனைவரது பாராட்டையும் பெற்றது

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ அமைப்பினர் ஆர்ப்பாட்டம்...!



வந்தவாசி, நவ 19:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகம் எதிரே ஜாக்டோ ஜியோ அரசு ஊழியர்கள் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் பழைய ஒய்வூதிய திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும், ஆசிரியர் தகுதித் தேர்வை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள் சபரிராஜ், க.வாசு, செந்தில்குமார், ராஜேஷ், இப்ராகிம், ரகுபாரதி, ஆசிரியைகள் சாந்தி, மணிமேகலை மற்றும் மேனாள் சங்க மாநில பொறுப்பாளர் கேப்டன் பிரபாகரன் உள்ளிட்ட ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

## அரியலூர் மாவட்டத்தில் போதைப்பொருள் இல்லாத இந்தியாவிற்கான பிரச்சாரம் உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, தலைமையில் ஏற்கப்பட்டது.



அரியலூர், நவ. 19–

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், போதைப் பொருள் இல்லாத இந்தியாவிற்கான பிரச்சாரம் உறுதிமொழி (நசா முக்த் பாரத் உறுதிமொழி) மாவட்ட ஆட்சித்தலைவர் இரத் தினசாமி, தலைமையில் அரசு அலுவலர்களால் ஏற்கப்பட்டது.

அதன்படி "இளைஞர் கள் எந்த நாட்டின் வளர்ச்சிக்கும் முதன்மை சக்தி, சமூகத்தையும் நாட்டு முன்னேற்றத் தையும் உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானது. எனவே அதிக அளவில் இளைஞர்கள் நஷா முக்த் பாரத் (மயக்கம் இல்லா இந்தியா) இயக்கத்தில் கலந்து கொள்வது மிகவும் அவசியமானது.

நமது நாட்டின் இச்சவாலை ஏற்று, இன்று நாம் அனைவரும் நஷா முக்த் பாரத் இயக்கத்தின் கீழ் ஒன்றுபட்டு, நமது சமூகத்தையும். குடும்பத்தினரையும், நண்பர்களையும் மட்டுமல்லாமல், நாமும் நிச்சயமாக போதைப் பழக்கத்திலிருந்து விலகி இருப்போம் என்று உறுதி மேற்கொள் கிறோம். ஏனெனில் மாற்றம் நம்மிடமிருந்தே தொடங்க வேண்டும்.

ஆகையால், நாம் அனைவரும் ஒன்றிணைந்து நமது அரியலூர் மாவட்டம்/ தமிழ்நாடுஐ போதை இல்லா மாவட்டம் / மாநிலமாக மாற்ற உறுதி யான முடிவெடுக்கலாம்.

என் நாட்டை போதை இல்லா நாடாக மாற்றுவதற்காக என் திறன் மற்றும் முயற்சியில் இயன்ற அனைத்தையும் செய்வேன் என்று நான் உறுதிப்பட தெரிவித்து க்கொள்கிறேன்" என மாவட்ட ஆட்சித் தலைவர் இரத்தினசாமி, தலைமையில் அனைத்து அரசு அலுவலர்களும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் .மல்லிகா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்..சிவராமன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .பரிமளம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் .சரவணன், மாவட்ட நிலை அலுவலர்கள் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஜாக்டோ ஜியோ சார்பில் ஒரு நாள் வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டம் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. பழைய ஓய்வூதிய திட்டம் உட்பட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு நாள் ஜாக்டோ ஜியோ சார்பில் வேலை நிறுத்தம். இதில் ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள் ஆசிரியர்கள் வருவாய்த்துறை ஊரக வளர்ச்சித்துறை ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.

# மனிதவிலங்கு மோதல் தடுப்பு பயிற்சி,20,000 மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்க தமிழக அரசு திட்டம்

## அமைச்சர் ராஜேந்திரன் தகவல்



சேலம், நவ.19–

சேலத்தில் ஆசிரியர் களுக்கான மனிதவிலங்கு மோதல் தடுப்புப் பயிற்சித் திட்டத்தை சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன், தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பின்னர், கூட்டுறவு வார விழாவின் ஒரு பகுதியாக, ரூ.20.08 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளையும் அமைச்சர் வழங்கினார்.

மனக்காடு காமராஜர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடந்த ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய அமைச்சர் ராஜேந்திரன், சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த அரசு ஆணையின் படி, தமிழ் நாடு முழுவதும் உள்ள 20,000 பள்ளி மாணவர்களுக்கு வனப் பாதுகாப்பு மற்றும் வன விலங்கு கணக்கெடுப்பு குறித்து பயிற்சி அளிக் கப்படும் என்று தெரிவித்தார்.

வனத்தீ மேலாண்மை மற்றும் மனித வனவிலங்கு மோதல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத் துடன் இந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்சி பெறுவார்கள். வன மற்றும் வனவிலங்குப் பாது காப்பில் உள்ள சவால்கள் மற்றும் தீர்வுகள், வனப் பாதுகாப்பு, வனத் தீ மேலாண்மை மற்றும் வன விலங்கு கணக்கெடுப்பு போன்ற தலைப்புகளில் வகுப்புகள் நடத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

சென்னையில் 1,500 மாணவர்கள் தேர்ந்தெடுக் கப்படு வார்கள். மீதமுள்ள 37 மாவட்டங்களில் இருந்து தலா 500 மாணவர்கள் இந்தத் திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக் கப்படுவார்கள். சேலம் மாவட்டத்தில் 25 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு, அவர்கள் தலா 20 மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு 2 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், அதன் பிறகுத் தேர்ந் தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒரு மாத காலத்திற்குப் பயிற்சி வழங்குவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார். பின்னர், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சமுதாயக் கூடத்தில் நடந்த 72வது அகில இந்தியக் கூட்டுறவு வார விழாக் கொண்டாட்டத் தில் அமைச்சர் கலந்து கொண்டார். விழாவில், 2,593 பயனாளிகளுக்கு ரூ.20.08 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார். மேலும், ரூ.3.55 கோடி மதிப்பிலான புதிய கட்டிடங்களையும் அவர் திறந்து வைத்தார்.

இந்த விழாவில் பேசிய அமைச்சர் ராஜேந்திரன், சேலம் மாவட்டத்தில் 11.11 லட்சம் ரேஷன் அட்டைதாரர்கள் இருப்பதாகவும், 21,642 மெட்ரிக் டன் அத்தியா வசியப் பொருட்கள் விநியோகிக்கப் பட்டுள்ள தாகவும் கூறினார். கடந்த நான்கரை ஆண்டுகளில் ரூ.21,856 கோடி மதிப்பிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சியர் பிருந்தா தேவி, நாடாளுமன்ற உறுப் பினர்கள் சிவலிங்கம், மலையரசன், செல்வ கணபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் அருள், சதாசிவம், மாநகர மேயர் ராமச்சந்திரன் மற்றும் அதிகாரிகள் உள்ளிட் டோர் கலந்து கொண்டனர்.

## உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு 4 பிரிவுகளில் ஓவியப்போட்டி

### திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் நவ 19 :

டிசம்பர் 03.12.2025, உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வருகின்ற 21.11.2025 திருவள்ளூர் மாவட்டத்தில் நான்கு பிரிவுக்கான ஓவியப்போட்டி நடைபெற உள்ளது. செவித்திறன் குறைபாடுடையோர், இயக்கத்திறன் குறைபாடுடையோர், அறிவுசார் குறைபாடுடையோர், புறவுலக சிந்தனையற்றோர், மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப் பட்டோர், பார்வைத்திறன் குறைபாடுடையோர் அவர்கள் விருப்பப்பட்ட தலைப்பில் ஓவியம் வரையலாம். 10 வயதிற்கு கீழ் Crayons and colour Pencil, 11 18 வயதிற்கு வரை Water colour, 18 வயதிற்கு மேல் தங்கள் விருப்பப்படி எந்த பொருள் வேண்டுமானாலும் பயன்படுத்தி ஓவியம் வரையலாம்.



இதற்கான Chart Paper (A3 or A4 size) பயனாளிகள் கொண்டு வர வேண்டும். இதில் முதல் பரிசு ரூ.1000, இரண்டாம் பரிசு ரூ.500 , மூன்றாம் பரிசு ரூ.250 வழங்கப்பட உள்ளது. இதற்கான கால அவகாசம் 1 முதல் 2 மணி நேரம் வரை. மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை கட்டாயமாக கொண்டு வர வேண்டும். மாற்றுத்திறனாளிகளின் விவரங்களை 20.11.2025 க்குள் அனுப்ப வேண்டும்.

மேலும் விவரங்களை பதிவு செய்ய திருவள்ளூர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தை அணுகலாம் என மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

## திருவள்ளூர் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் 444 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன



திருவள்ளூர் நவ 19 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும்நாள் கூட்டம் நடைபெற்றது.மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை புரிந்த பொது மக்கள், தங்களது குறை களை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் பொது பிரச்சனைகள் தொடர் பாக உதவிகள் வேண்டியும் 444 மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினர். இதில், நிலம் சம்பந்தமாக 136 மனுக்களும் சமூக பாது காப்பு திட்டம் தொடர் பாக 54 மனுக்களும் வேலைவாய்ப்பு வேண்டி 70 மனுக்களும் பசுமை வீடு, அடிப்படை வசதிகள் வேண்டி 97 மனுக்களும் மற்றும் இதர துறைகள் சார்பாக 87 மனுக்களும் என மொத்தம் 444 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கைமேற்கொண்டு தகுதியுள்ள பயனாளி களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்குமாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அறிவுறுத் தினார்.

மேலும், தூய்மை பணியாளர்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு அதற்கு தீர்வுக்கான சம்பந்தப் பட்ட அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி) பாலமுருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) நிர்மலா, மாவட்ட வழங்கல் அலுவலர் வெங்கடேசன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன், துணை ஆட்சியர் பயிற்சி) செ.சண்முக பிரீத்தா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புகைப்பிடிக்காதவர்களிடையே COPD (சிஓபிடி) பாதிப்புகள் அதிகரிப்பு:

## *காரணங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் *டாக்டர் எம். பாலசந்தர், ஆலோசகர் நுரையீரல் நிபுணர்,

கோவை நவ:19

நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (COPD) (சிஓபிடி) என்பது நாள்பட்ட அழற்சி நுரையீரல் நோய்களின் ஒரு குழு ஆகும். இது நுரையீரலில் இருந்து காற்று ஓட்டத்தைத் தடுக்கிறது, இதனால் சுவாசிப்பது கடினம். COPD (சிஓபிடி) யின் கீழ் வரும் இரண்டு பொதுவான நிலைகள் எம்ஃபிசெமா மற்றும் நாள்பட்ட மூச்சுக்குழாய் அழற்சி ஆகும். அறிகுறிகளில் சுவாசிப்பதில் சிரமம், இருமல், செயல்பாட்டுக் கட்டுப்பாடு, மூச்சுத்திணறல் மற்றும் அதிகப்படியான சளி உற்பத்தி ஆகியவை அடங்கும்.

COPD (சிஓபிடி) பெரும்பாலும் நச்சு வாயுக்கள் அல்லது துகள் பொருட்களுடன் நீண்ட கால வெளிப்பாட்டால் ஏற்படுகிறது மற்றும் பொதுவாக புகைபிடித்தலுடன் தொடர்புடையது. இருப்பினும், புகையிலை புகைத்தல் நீண்ட காலமாக உறுதிப்படுத்தப்பட்ட அபாயக் காரணியாக இருந்தாலும், உலகளாவிய COPD (சிஓபிடி) பாதிப்புகளில் இது சுமார் 35% மட்டுமே என்று ஆய்வுகள் காட்டுகின்றன. தற்போது, கிட்டத்தட்ட பாதிக்கும் மேற்பட்ட நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (COPD) (சிஓபிடி) பாதிப்புகள், புகையிலையற்ற காரணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் காற்று மாசுபாடு, புகை அல்லது வாயுக்களுக்கு தொழில்ரீதியான வெளிப்பாடு, மற்றும் மறைமுக புகை உள்ளிழுத்தல் ஆகியவை அடங்கும்.

புகைபிடிக்காதவர்களிடையே COPD (சிஓபிடி) க்கான முக்கிய ஆபத்து காரணிகள்

இரண்டாம் நிலை புகை: செயலற்ற புகை வெளிப்பாடு ஒருபோதும் புகைபிடிக்காத பெரியவர்களிடமும் கூட COPD (சிஓபிடி) ஐ



ஏற்படுத்தலாம்.

ரசாயனம் மற்றும் புகை வெளிப்பாடு: தொழில்ரீதியாகத் தூசி, வாயு மற்றும் புகைப் பொருட்களுக்கு ஆளாவது, படிப்படியாக நுரையீரலைச் சேதப்படுத்தி COPD (சிஓபிடி) அபாயத்தை அதிகரிக்கும்.

காற்று மாசுபாட்டிற்கு நீண்ட கால வெளிப்பாடு: தொடர்ந்து மாசுபட்ட காற்றைச் சுவாசிப்பது, ஆஸ்துமா போன்ற ஏற்கெனவே இருக்கும் சுவாச நோய்களை மோசமாக்குவதுடன், COPD (சிஓபிடி) இன் புதிய பாதிப்புகளுக்கும் வழிவகுக்கும்.

உட்புற காற்று மாசுபாடு: சரியான காற்றோட்டமில்லாத வீடுகளில், சமையல் அடுப்புகள் மற்றும் பயோகேஸ் எரிபொருட்களில் இருந்து வரும் புகை நுரையீரலைப் பாதிக்கலாம்.

ஊதுபத்தி அல்லது கொசுவர்த்திச் சுருள் ஏற்றுவதும் இதற்கு ஒரு காரணமாகும் ஷ மூடிய அறையில் ஒரு கொசுவர்த்திச் சுருளை எரிப்பது, 100 சிகரெட்டுகளுக்கு இணையான மாசுபாட்டை உருவாக்க முடியும்.

மரபணு காரணிகள்: ஆல்பா1ஆன்டிட்ரிப்சின் போன்ற மரபணுக் குறைபாடுகள் காரணமாக COPD (சிஓபிடி) ஆனது குடும்பங்களில் ஏற்படலாம்.

இந்த காரணிகள் COPD (சிஓபிடி) இனி ஒரு புகைப்பிடிப்பவரின் நோய் மட்டுமல்ல, பொது மக்களுக்கு ஒரு வளர்ந்து வரும் அச்சுறுத்தல் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இது மீள முடியாத நுரையீரல் சேதத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், விழிப்புணர்வு, தடுப்பு மற்றும் சரியான நேரத்தில் தலையீடு அவசியம்.

புகைபிடிக்காதவர்களிடையே COPD (சிஓபிடி) ஐத் தடுத்தல் மற்றும் கண்டறிதல்

ஆபத்து காரணிகளை அடையாளம் கண்ட பிறகு, அடுத்த படி வெளிப்பாட்டை மதிப்பிடுவது மற்றும் நுரையீரல் ஆரோக்கியத்தில் அதன் தாக்கத்தை மதிப்பிடுவது.

ஆரம்பகால நோயறிதலுக்கு ஸ்பைரோமெட்ரி பரிசோதனைக்காக மருத்துவரை அணுகுவது மிக முக்கியம். பைரோமெட்ரி என்பது ஒரு நபர் எவ்வளவு காற்றை உள்ளிழுக்கிறார் மற்றும் வெளியிடுகிறார், மேலும் ஒரு ஆழமான சுவாசத்திற்குப் பிறகு முழுமையாக வெளிவிட எவ்வளவு நேரம் ஆகும் என்பதை அளவிடுகிறது. இதுவே COPD நோயைக் கண்டறிவதற்கான 'தங்கத் தரநிலை' நுரையீரல் செயல்பாடு பரிசோதனையாகும்.

தடுப்பு நடவடிக்கைகள்

இரண்டாம் நிலை புகையைத் தவிர்க்கவும்.

மாசுபாடு அதிகமாக உள்ள இடங்கள் மற்றும் அதிக புகை அல்லது கடுமையான இரசாயனங்கள் உள்ள பகுதிகளைத் தவிர்க்கவும்.

புகை, வாயு, அல்லது தூசிக்கு ஆளாவது தவிர்க்க முடியாததாக இருந்தால், முகக்கவசம் அணியவும்.

குளிர் காலங்களில் பெரிய மக்கள் கூட்டங்களைத் தவிர்ப்பதன் மூலம் மார்புத் தொற்றுக்களைத் தடுக்க, ஆண்டுதோறும் காய்ச்சல் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும்.

COPD (சிஓபிடி) க்கு குணப்படுத்த மருந்து இல்லாவிட்டாலும், ஆரம்பகால நோயறிதல், சிகிச்சையைப் பின்பற்றுதல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பராமரித்தல் ஆகியவற்றின் மூலம் இதை நிர்வகிக்கலாம் மற்றும் மோசமடையாமல் தடுக்கலாம்.



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் பூர்த்தி செய்யப்பட்டதை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பெறப்பட்டு வரும் பணிகளை சேலம் மாவட்டம், ஏற்காடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அத்தனூர்பட்டி பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

# சோழவரம் அருகே உள்ள எழில் நகர் பகுதியில் தண்ணீர் புகுந்துவிடுவதை சீர் செய்து தருவதாக பொன்னேரி காங்கிரஸ் எம்எல்ஏ உத்தரவு அளித்தும் கண்டுகொள்ளவில்லை

## பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார்



திருவள்ளூர் நவ 19 :
சென்னை மக்களின் குடிநீர் ஆதாரமாக இருக்கும் பூண்டி சத்தியமூர்த்தி நீர்த் தேக்கத்தின் மொத்தக் கொள்ளளவான 3231 மில்லியன் கன அடி வரை நீரை சேமிக்க முடியும். ஆனால் தற்போது மழை காலங்களில் நீர் வரத்து அதிகமாக இருப்பதால் உபரி நீரை வீணாக கொசஸ்தலை ஆற்றில் திறந்து விடுகின்றனர். அவ்வாறு திறந்து விடும் போது, கொசஸ்தலை ஆற்றின் கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் எச்சரிக்கின்றனர். ஆனால் சோழவரம் ஒன்றியம் விச்சூர் அடுத்த எழில் நகர் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் கொசஸ்தலை ஆற்றில் தண்ணீர் திறந்துவிடும் போது இந்த கிராமத்திற்கு தண்ணீர் புகுந்துவிடுகிறது.

இது குறித்து தொடர்ந்து வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் புகார்கொடுத்தும் எந்த நடவடிக்கை எடுக்காத நிலையில் கடந்த ஆண்டு பொன்னேரி காங்கிரஸ் எம்எல்ஏ துரை சந்திரசேகர் நேரில் ஆய்வு செய்த போது, அடுத்த மழை காலத்திற்குள் இதற்கு மேம்பாலம் கட்டித் தரப்படும் என்றும் கிராமத்திற்கு தண்ணீர் புகாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கைப்பட கடிதம் எழுதி கொடுத்துவிட்டு சென்றவர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது.

தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கிய நிலையில் பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து தற்போது தண்ணீர் திறந்து விட்டிருப்பதால் மீண்டும் ஊருக்குள் தண்ணீர் புகும் அபாயம் உள்ளது. எனவே கிராமத்திற்குள் தண்ணீர் புகாதவாறு மேம்பாலம் கட்டித்தரவேண்டும் என அப்பகுதி மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தனர்.

# நகர்வனத்தில் அப்படி என்ன ஸ்பெஷல்?

## சேலம் மாவட்ட செய்தியாளர் K.துருவன் நரேஷ்(எ)நரேஷின் விளக்கம்!



சேலத்தில் 50 ஹெக்டேர் வாக்கிங், சைக்கிளிங், குடில்கள்,ரூ.10 மட்டுமே

சேலம் மாவட்டம், குரும்மபட்டி வன உயிரியல் பூங்கா அருகில் புதியதொரு சுற்றுலா தலம் அண்மையில் சேலம் வனசரகரால் திறந்து வைக்கப்பட்டது என்ற தகவலோடு அங்கு பார்வையாளராக சென்றேன்.

என்ன இருக்கு அங்கு?

சுமார் 50 ஹெக்டேர் பரப்பளவில் இயற்கை சூழலோடு இணைந்த ஒரு சுற்றுலா தலம், பெயர் நகர்வனம்.இன்றைய சூழலில் சுற்றுலா தலங்களின் மீதான தேவையை உணர்ந்தும், இயற்கை வளம் குன்றாமல் மக்களுக்கான பொழுதுப் போக்கை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவானது இந்த நகர்வனம் எனலாம்.

சுமார் 2 கி.மீ தூரத்திற்கு நடந்து சென்று இயற்கை காட்டை பார்வையிடும் ஒரு இடமாகவும், ஓய்வெடுக்க ஆங்காங்கே சுமார் 10 இயற்கை வடிவமைப்பு கொண்ட குடில்களுடன், தண்ணீர் வசதி கொண்ட உட்காரும் இடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறு பூங்காவுடன் அமைக்கப்பட் டுள்ளது இந்த நகர்வனம்.

ஆங்காங்கே, சுமார் 7 வரவேற்பு அமைப்புகள் அமைக்கப்பட்டு, சுற்றிலும் கம்பி வேலிகளால் சூழப்பட்டுள்ளது. சைக்கிளிங் பாதையாக சுமார் 3 கி.மீ தூரத்திற்கு பாதை அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 7000 மரக்கன்றுகள் நடவு செய்து புதிய ஒரு வனத்தினை உருவாக்கும் முயற்சியையும் உள்ளடக்கியது நகர்வனம்.

காட்டுக்குள்ளே என்றால் காட்டு விலங்குகள்?!

இல்லை. இது குறித்து வன பணியாளர் அவர்களிடம் கேட்ட போது,``இந்த நகர்வனம் சுமார் 2 ஆண்டுகள் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. ஆதலால், காட்டு விலங்குகள் அச்சுறுத்தல் ஏதும் இல்லை. மேலும், நுழைவு வாயிலில் நுழைவு சீட்டு வாங்கும் போது பெயர், தொலைபேசி மற்றும் உள்நுழைவு நேரம் பதிவு செய்யப்படும். அதே போல வெளியேறும் போதும் வெளியேறிய நேரம் மற்றும் கையொப்பம் பெறப்படும். அதற்கென தனி பதிவேடு பராமரிக்கப்படும்.

ஆதலால், காட்டுக்குள் சென்று திரும்பாத நபர்களை கண்காணிக்க இது பயன்படும். மேலும்,சுமார் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை கூட்டத்திற்கேற்ப வன பணியாளர்கள் வனத்திற்குள்ளே சுற்றுப்பயணம் மேற்கொள்வதன் மூலம் சட்ட விரோத பணிகள் கண்காணிக் கப்பட்டு தடுக்க மற்றும் தண்டிக்கப்படும்.

நுழைவுக்கட்டணம் மற்றும் நேரம்!

நபர் ஒருவருக்கு பத்து ரூபாய் நுழைவு கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இரு சக்கர வாகனங்களுக்கு தனியாக ரூபாய் 10 வசூலிக்கப்படுகிறது. நான்கு சக்கர வாகனங்களுக்கு இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இந்த நகர்வனம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும். ஒரு முறை நுழைவு கட்டணம் வாங்கினால் மாலை 6 மணி வரை அங்கு பொழுதைப்போக்கலாம்.

யாருக்கு ஏற்றது நகர்வனம்?

அமைதியான இயற்கை சூழலில் பொழுதை கழிக்க விரும்பும் இளைஞர்கள் மற்றும் நடைப்பயணம் மேற்கொள்ள முடிந்த நபர்களுக்கு ஏற்ற இடமாகும். 10 சிறு குடில்களில் ஓய்வெடுக்கலாம். குழந்தைகள் இருந்தால் அந்த சிறு பூங்காவில் விளையாடியும் பொழுதைப் போக்கலாம். மொத்தத்தில் அமைதியான இயற்கை சூழல் விரும்பிகளுக்கு உகந்த இடமாக இது அமைகிறது.

மக்கள் வரவை பொறுத்து மேலும் சில மாற்றங்கள் அங்கு நிகழ வாய்ப்புள்ளது என்றார் வன பணியாளர். 10 ரூபாய் பணத்திற்கு ஒரு எளிய பொழுதுபோக்கு என்பதில் ஐயமில்லை என்பதை உறுதி செய்கிறேன்.

# ஆரணி எம்பி பிறந்தநாள் விழாவில் எம்எல்ஏ வாழ்த்து..!



வந்தவாசி, நவ 19:
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த எரமலூர் கிராமத்தில் ஆரணி எம்பி எம். எஸ். தரணிவேந்தன் பிறந்தநாளையொட்டி, எம்எல்ஏ எஸ்.அம்பேத்குமார் சால்வை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும் வந்தவாசி நகர் மன்ற தலைவர் ஜலால், துணைத் தலைவர் அன்னை சீனிவாசன், நகர செயலாளர் தயாளன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் இஎஸ்டி கார்த்திகேயன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரும் நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர். மேலும் பங்கேற்ற அனைவருக்கும் மாவட்ட அலுவலகத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது.





திமுக கழகத் துணைப் பொதுச் செயலாளராக பொறுப்பேற்ற தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை அமைச்சர் மு.பெ சாமிநாதன் அவர்களுக்கு திருப்பூர் பெருமாநல்லூரில் உள்ள தனியார் திருமண மஹாலில் ஒன்றிய செயலாளர் காளிபாளையம் விஸ்வநாதன் ஏற்பாட்டில் நேற்று முன்பு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது

இதில் திமுக மாநகர செயலாளர் தங்கராஜ் உள்ளிட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பெரும் திரளாக பங்கேற்றனர் மேலும் பொது கட்டுமான தொழிலாளர்கள் நல சங்கத்தின் சார்பாகவும் அவருக்கு பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டு மேலும் பல்வேறு கோரிக்கைகளை மனுவாக எழுதிக் கொடுத்தனர் இந்த நிகழ்வில் மாநில பொது செயலாளர் ராஜாமணி. மாநில செயலாளர் மனோகர். துணைத்தலைவர் கிருஷ்ணதாஸ். கோவிந்தசாமி.குப்புசாமி துரை.மற்றும் திமுக தலைமையிலான கூட்டணி கட்சி நிர்வாகிகளும் பெரும் திரளாக பங்கேற்றனர்

# திருவள்ளூரில் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ சார்பில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம்




திருவள்ளூர் நவ 19 :
திருவள்ளூர் மாவட்ட மருத்துவக் கல்லூரி நுழைவு பகுதியில் பழைய ஓய்வூதிய திட்டம் உடனடியாக அமல்படுத்துதல் உள்பட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ சார்பில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் இரா. தாஸ், ஞானசேகரன், சே. பிரபாகரன், சீ.காந்திமதி நாதன் ஆகியோர் கலந்து கொண்டு போராட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினர்.

பழைய ஓய்வூதிய திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்திட வேண்டும், இடைநிலை ஆசிரியர் ஊதிய முரண்பாடு மற்றும் முதுநிலை அனைத்து நிலை ஆசிரியர்கள் ஊதிய முரண்பாட்டை நீக்க வேண்டும், பகுதிநேர ஆசிரியர்கள் தொகுப்பூதிய மதிப்பூதிய நிலையில் வேலை செய்யும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கால முறை ஊதியம் வழங்கிட வேண்டும், உள்பட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். இன்றைய வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர்கள் சுமார் 5 லட்சம் பேர் தமிழ்நாடு முழுக்க இந்த ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் பங்கு பெறுவார்கள் என்றும் தெரிவித்தனர்.

மேலும் தமிழ்நாட்டில் நீட் வேண்டாம் என அறிவித்த முதல் டெட் எனப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வையும் ரத்து செய்ய வேண்டும். 243 அரசாணையை ரத்து செய்திட வேண்டும். அதே போல் ஊராட்சி ஊழியர்கள, ஊர்ப்புற நூலக ஊழியர்கள், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் என அத்தனை நிலையிலும் இவர்களது ஒரு கோரிக்கையை கூட விடியா அரசு நிறைவேற்றவில்லை. போராட்டம் காரணமாக நாங்கள் சாலைக்கு வந்துவிட்டோம். அனைத்து அரசு அலுவலகங்களும் இன்று மூடப்பட்டு இருக்கிறது. பணியில் இருக்கும் போது லட்ச ரூபாய் ஊதியம் பெற்று வந்த அரசு ஊழியர் இன்று அத்து கூலிகளாக பெயிண்ட்டராக, தினக்கூலிகளாக சென்று கொண்டிருக்கிற அவல நிலை ஏற்பட்டுள்ளது. அரசு ஊழியர்களை முதுகெலும்பு என்று சொல்லும் முதல்வர் ஸ்டாலின் ஏன் எங்கள் முதுகெலும்பை உடைக்கிறார் என்றும் கேள்வி எழுப்பினர்.

எஸ்ஐஆர் பணிக்கு போதிய பயிற்சி தராமல், கால அவகாசமும் தராமல் தமிழக அரசு அலைக்கழிப்பதாகவும், பெண் ஊழியர்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி உள்ளதாவும், வட்டாட்சியர் அளவில் அதிகாரிகள் மிகுந்த சிரமத்தை அனுபவித்து வருவதாகவும் குற்றம்சாட்டினார். இந்த பணி செய்பவர்களுக்கு மதிப்பூதியம் வழங்க வேண்டும். இந்த போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக கோரிக்கையை ஏற்று அறிவிக்க வேண்டும். இன்றைய முதல்வர் கோரிக்கையை நிறைவேற்றித் தருவதாக கூறியிருக்கிறார். தரவில்லை என்றால் நாங்கள் கண்டிப்பாக தர வைப்போம் என்றும் தெரிவித்தனர்.

# சாலை அமைக்கும் பணியோடு சேர்த்து சாக்கடை அமைத்திட கோரிக்கை.. சிவகிரி பேரூராட்சி பகுதி பொதுமக்கள் ஆட்சியரிடம் புகார் மனு..



ஈரோடு. நவ. 19
ஈரோடு மாவட்டம் சிவகிரி பேரூராட்சி பகுதியில் சாலை அமைக்கும் பணிவோடு சாக்கடை அமைக்கும் பணியையும் சேர்த்து செய்திட வேண்டுமென ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் அப்பகுதி பொதுமக்கள் புகார் மனு கொடுத்தனர்.

ஈரோடு மாவட்டம் கொடுமுடி வட்டம் சிவகிரி பேரூராட்சி வார்டு எண் 13 பகுதியில் சுமார் 200க்கும் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு சாக்கடை வசதி பல ஆண்டுகாலமாக செய்து தரப்படாமல்.

இப்பகுதியில் கழிவுநீரை அந்தப் பகுதியை சேர்ந்த மக்கள் தங்களின் வீட்டிற்கு உள்ளேயே குழி தோண்டி பூமியில் இறக்கி வரும் அவல நிலை தொடர்ந்து இருந்து வருகிறது.

வேறு சிலர் கழிவு நீரை நடைபாதையில் விடுகின்றனர். இதனால் கடுமையான சுகாதார சீர்கேடு அப்பகுதியில்.

மழைக்காலங்களில் பலவித தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம். இந்த பகுதியில் உள்ள மக்கள் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகவசித்துவரும்பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர், சட்டமன்ற உறுப்பினர், பேரூராட்சி நிர்வாகம்என்று அனைவரிடமும் பலமுறை சாக்கடை வசதி அமைத்து தர கோரிக்கைகளை முன்வைத்தும், பலமுறை மனு அளித்தும் இதுவரை எங்களுடைய கோரிக்கை ஏற்கப்படவில்லை.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பாக இங்கு சாலை வசதி ஏற்படுத்திய போது இந்த பகுதியில் உள்ள மக்கள் சாலை அமைப்பதோடு சாக்கடையையும் அமைக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். சாலை அமைத்த பின்னிட்டு நிதி பெற்று சாக்கடை அமைத்து தருவதாக வாக்குறுதி அளித்த பேரூராட்சி நிர்வாகம் இதுவரை அந்தப் பணியை கிடப்பில்.

தற்போது வேட்டுவபாளையம் சாலை முதல் கவுண்டம்பாளையம் சாலை வரை சாலை அமைக்கும் பணி நடைபெற உள்ளதாக தகவல்.

இந்த முறை சாலை அமைக்கும் பொழுது சாக்கடை வசதியுடன் சாலை போடும் பணி தொடங்க வேண்டும் என்ற அப்பகுதி மக்களின் கோரிக்கையை முன் வைக்கிறோம்.

இந்தப் பகுதியில் வாழும் மக்களின் கோரிக்கை தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு. சிவகிரி விஜபி நகர், விநாயக நகர் குடியிருப்பு பகுதிகளில் உருவான 10 வருடங்களுக்குள் சாக்கடை, சாலை, தெருவிளக்கு, குடிநீர் , போன்ற அடிப்படை வசதிகளை அமைத்து கொடுத்த பேரூராட்சி நிர்வாகம் இப்பகுதி மக்களை.

ஆகவே சொல்லிக்காடு குடியிருப்பு பகுதியில் உடனடியாக சாக்கடை வசதி அமைத்திட பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பகுதி பொதுமக்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும் கனிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கொடுமுடி தாலுக்கா மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் எம். சசி அப்பகுதி பொதுமக்கள் மூலமாக ஈரோடு ஆட்சியரிடம் கொடுத்த மனதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421